Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month    Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14    Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14
வேணு : 20    செப்டம்பர் 2014    கானம் : 2



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI


ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 20 | செப்டம்பர் 2014 | கானம் : 2

Delivered by India Post    www.indiapost.gov.in



மதுரபுரி ஆஸ்ரமத்தில்



ஆகஸ்டு 3- 6, தஞ்சாவூர் ஸ்ரீநவநீதகிருஷ்ணன் கோவிலில் பக்த விஜய உபன்யாசம்



ஆகஸ்டு 15 - G.O.D இந்தியா டிரஸ்ட் மற்றும் தூத்துக்குடி ஸ்ரீசக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை சார்பாக, மணிமங்கலம் மற்றும் மஹாரண்யம் கிராம அரசு பள்ளிகளில், சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசு



ஆகஸ்டு - ஆஸ்திரேலிய நியூசிலாந்து சத்சங்கங்கள்
பூர்ணிமாஜி




ஆகஸ்டு 1-9 முரளிஜி நெய்வேலி டவுன்ஷிப்பில் ஸ்ரீமத் ராமாயண
உபன்யாசம்








ஆகஸ்டு 2 சென்னை மயிலை பைன் ஆர்ட்ஸ் கிளப்பில்
உலக நன்மைக்காக பக்தி சங்கீத உற்சவம்

Confederation of Indian Industry - CII - Chennai Day event
Transformational Leadership - Ramanujamji - August 21





சென்னையில்
சம்ஸ்க்ருதி – ஜுலை 27 மற்றும் புராநவா – ஆகஸ்டு 2
G.O.D இந்தியா டிரஸ்ட்


































ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 செப்டம்பர் 2014 கானம்: 2

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-222 | 03 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 |
| பாகவத பழம்- ஸ்க 2/16 | 08 |
| சத்திய சாதனை | 12 |
| அன்பு ஒன்றினால் ... | 13 |
| ஸ்ரீவேதாரண்ய சிறப்பு | 15 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 21 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| பிருந்தாவன நந்தகுமாரன் | 30 |
| மாலே மணிவண்ணா | 32 |
| மஹாபெரியவாள் கருணை | 34 |


**மறம் மலி உலக வாழ்க்கை வேண்டும்**

**வந்து நின் அன்பர் பணியாம் அறமது கிடைக்கின்**

**இன்னமும் பிறவியும் வேண்டும்**

**- தாயுமானவரின் இதயகீதம்**

பிறவிதோறும் ஞானிகளுக்கு பணிவிடை செய்யும் பேறு கிடைக்குமாயின், துன்பம் நிறைந்த நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கையும் வேண்டும். இனிமேலும் பிறவிகள் வேண்டும்.

**Announcement**

To know about Sri Swamiji's Darshan Timings, Events & also to Register your Prayers, Please call +91-9382393833

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : மத்யமாவதி

இப்படி ஒரு குழந்தையை கண்டவருண்டோ?
எப்படி நான் சொல்வேன் அதை!
(இப்படி ...)

பெற்றவள் செய்த பாக்கியமோ
சுற்றத்தார் செய்த பாக்கியமோ
கற்றறிந்தவர் செய்த பாக்கியமோ
பற்றற்றவர் செய்த பாக்கியமோ
(இப்படி ...)

துறந்தவர் செய்த பாக்கியமோ
குற்றமற்றோர் செய்த பாக்கியமோ
நற்தவமுடையோர் பாக்கியமோ
பரந்த பாரிலுள்ளோர் பாக்கியமோ (இப்படி ...)

அன்பு அடக்கம் பணிவு துணிவு
வாய்மை தூய்மை நேர்மை வீரம்
கொண்டவனாயினும் தன்னை மதித்தறியான்
குறும்புகள் செய்திடுவான் மாடு கன்று மேய்த்திடுவான் (இப்படி ...)

வெண்ணை பால் தயிர் விரும்பி உண்டிடுவான்
கண்ணனென்று இவன் பெயர் கோகுல மன்னனிவன்
தன்னை பாடும் அடியார்களின்
எண்ணத்தில் நிறைந்து லீலைகள் செய்திடுவான் (இப்படி ...)

பின் அட்டை:
மதுரபுரி ஆஸ்ரம வளாக கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமாருக்கு ஆடி மாதம் மூல நக்ஷத்திரத்தன்று திருமஞ்சனம்



# மதுரமான மஹனீயர் - 222

– டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சத்சங்கத்தில் அடிக்கடி கோபிகா கீதம், குந்தி ஸ்துதி, ஹனுமான் சாலீஸா, விஷ்ணு சஹஸ்ர நாமம் என பல ஸ்தோத்திரங்களை சொல்ல சொல்வார்கள். மஹான்கள் அருளிய துதிகளை சொல்வதினால் பலவித நன்மைகள் நம்மை வந்தடையும் என்பதை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அடிக்கடி வலியுறுத்தவும் செய்வார்கள்.

மேலும், எந்த தெய்வத்தை நாம் துதித்து வணங்கி வருகிறோமோ, அந்த தெய்வம் நம்மை கூடவே இருந்து பாதுகாக்கும் என்பார்கள். அதற்கு, மஹாபாரதத்தில் ஒரு சம்பவத்தை, அடிக்கடி நினைவுகூர்வார்கள். பஞ்ச பாண்டவர்களின் அக்ஞாத வாசத்தின்பொழுது, திரௌபதிக்கு ஒரு பெரும் கஷ்டம் ஏற்பட இருந்தது. அவள் தவறான எண்ணம் கொண்ட கீசகனுடைய இருப்பிடத்திற்கு செல்ல நேர்ந்தது. செல்வதற்கு முன்பு இந்திரன், தர்மராஜன், பகன் முதலிய பல தேவதைகளையும் ஸ்தோத்திரம் செய்து, பிறகு ஒரு முகூர்த்த காலம், ஸூர்ய பகவானை மந்திரங்களால் ஸ்தோத்திரம் செய்தாள் த்ரௌபதி. அதில், சந்தோஷம் அடைந்த ஸூர்யன், த்ரௌபதியை காக்க ஒரு ராக்ஷஸனை மறைந்திருந்து, ரக்ஷிக்க உத்திரவிட்டான். த்ரௌபதி பயந்தது போலவே, கீசகன் தகாத முறையில் நடக்க முற்பட்டபொழுது, ஸூர்ய பகவான் அனுப்பிய ராக்ஷஸன், ஒரு பலமான காற்று மூலம், கீசகனை சாய்த்து த்ரௌபதியை காத்தது. நாம் மனதார செய்யும் ஸ்தோத்திரங்களோ, தெய்வீக ப்ரார்த்தனைகளோ, நிச்சயம் நம்மை கவசம் போல் காக்கும் என்று ஸ்ரீஸ்வாமிஜி கூறுவார்கள். ப்ரேமிகவரதன் மற்றும் சத்குருநாதரின் அருள் நிழலில் வாழ்ந்து வரும், பல பக்தர்களின் வாழ்விலும், இன்று வரை இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து கொண்டே வருகின்றன.

அமெரிக்காவில் உள்ள செனிதாராம் அவர்கள், ஜூலை 26 அன்று, தம் குடும்பத்துடன் காரில் ஹூஸ்டன் நாமத்வாருக்கு சென்று கொண்டிருந்தார். காரை அவர் கணவர் ஓட்ட, குழந்தைகள் பின் சீட்டில் ஓய்வெடுத்து கொண்டிருந்தனர். வெப்பம் நிறைந்த நேரமும் நாளும் அது. மதுரமுரளி நவம்பர் 2013இல் ஸ்ரீகிருஷ்ணகவசம் ஒன்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைப்படி, பிரசுரம் ஆகி இருந்தது. அந்த க்ருஷ்ண கவசத்தை செனிதாராம் தினமும் பாராயணம் செய்வார். அன்றும் பயணத்திற்கு முன், அந்த கவசத்தை சொல்லி இருந்தார்.

நெடுஞ்சாலையில் வேகமாக சென்று கொண்டிருந்த பொழுது, பக்கத்து சாலைப்பிரிவில் (லேனில் Lane) சென்று கொண்டிருந்த ஒரு டிரெயிலர் தொடர்பெட்டி (Trailer) லாரியானது, லேன் மாற முற்பட்டது. அந்த டிரெயிலர் மாறி வர இருந்த லேனில், செனிதாராமின் கார் முன்பாக, மற்றொரு கார் சென்று கொண்டிருந்தது. அந்த காரானது, டிரெயிலருக்கு நேர் பின்னால் நெருங்கி வந்து கொண்டு இருந்ததால், அதை டிரெயிலர் ஓட்டுனரால் பார்க்க இயலவில்லை. கடைசி நிமிடத்தில் கவனித்து விட்டார். உடனே, அந்த கார் மீது மோதாதிருப்பதற்காக வேகமாக ஸ்டீயரிங்கை மாற்று திசையை நோக்கி திருப்பினார். அவ்வளவுதான்! அந்த படுவேகத்தில் டிரெயிலர் நிலை தடுமாறி, அப்படியே முழுவதுமாக சுற்றியது. அதற்குள்ளாக முன்னிருந்த கார் அடிபடாமல் முன்னே சென்று விட்டது. அதற்குப்பின் இருந்தது செனிதாராமின் கார்தான். நிலை தடுமாறி சுழன்ற டிரெயிலரோ, முன்னர் சென்று கொண்டிருந்ததற்கு நேர் எதிர் திசையில், அதாவது, செனிதாராமின் காரை நோக்கி, படுவேகத்தில் வந்தது.

எல்லாம் கணநேரத்தில் நிகழ்ந்து விட்டது. காருக்குள் இருந்த செனிதாராமிற்கு ரத்தமே உறைந்தாற்போல் அச்சம் ஏற்பட்டது! என்ன செய்வது என்று யோசிக்கவோ செயலாற்றவோ அங்கு இடமில்லை! இமைக்கும்

நேரத்திற்குள்ளாக, அந்த டிரெயிலர், ஓரிரு இன்ச் தள்ளி, பக்கத்து லேனில் எந்த வாகனத்தின் மேலும் படாமல் நின்றது. பிற வாகனங்களும் "சட் சட்" என அடிபடாமல் நின்றன.

சுதாரித்து காரை விட்டு, வெளியே வருமுன் ஒரே படபடப்பு செனிதாராமிற்கு. ஒரு கணம்தான்! பேராபத்து ஏற்பட்டு இருக்கும்! நினைக்கவே பயமாய் இருந்தது. உடல் கொஞ்சம் நடுங்கியது. ஒரு சிறிய அடி கூட தனக்கோ, காருக்கோ ஏற்படாமல் தம்மை குருநாதர் காப்பாற்றி விட்டார் என்று உடனே அவருக்கு தோன்றியது. மனதினால் ஸ்ரீஸ்வாமிஜிக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து வணங்கினார் செனிதாராம். அந்த நிமிடமே, மற்றொருமுறை மதுரமுரளியில் வந்திருந்த அந்த ஸ்ரீகிருஷ்ண கவசத்தை ஸ்மரித்து சொன்னார். அதை சொல்லி வந்ததினாலேயே, தமக்கு ஆபத்து விலகியது என்று அவர் மனதில் நினைக்கவும், அன்று வெயில் தினமாக இருந்தாலும், அதையும் தாண்டி, கவசம் சொல்லி முடித்த அதே கணம், சில விநாடிகள் மழைத்துளி அவர்கள் மேல், விண்ணிலிருந்து விழுந்தது. அது செனிதாராமிற்கு, "சிரத்தையோடு கவசத்தை படித்த உனக்கு விண்ணுலக ஆசீர்வாதங்கள்" என்பது போலவும், "நீ எங்கிருந்தாலும் என் பாதுகாப்பிலும் அரவணைப்பிலும் இருக்கிறாய்" என ஸ்ரீஸ்வாமிஜி உணர்த்தியது போலவும் இருந்தது.

இதை, அவரே அனைவரிடமும் பகிர்ந்து கொள்ள இஷ்டப்பட்டு, உணர்ச்சி பூர்வமாய் எழுதி இருந்தார். மெய்சிலிர்க்கும் இவ்விஷயத்தை கேட்டவுடன், எப்படி எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜியின் அருள் நம்மை காத்து வருகிறது என்று தோன்றியதும், வியப்பிலாழ்ந்து போனேன்.

Music is not a form of entertainment; It is a form of enlightenment.

- Mahararanyam Sri Sri Muralidhara Swamiji
(concluding remarks at Mylai Fine arts Club)



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: வாழ்க்கையில் நடப்பதுதான் நடக்கும் என்கிறீர்கள். அதே சமயத்தில் லட்சியம் வேண்டும் என்கின்றீர்களே? முரண்பாடாக உள்ளதே!

பதில்: பிராரப்த கர்மாவை ஒட்டியே, ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அமைகின்றது. அப்படி அமையும்பொழுது ஏமாற்றம், வெற்றி, தோல்வி, மகிழ்ச்சி, வியாதி, துக்கம், விபத்து போன்ற எவ்வளவோ சம்பவங்கள் சம்பவிக்கலாம். அப்படி சம்பவிக்கும் எல்லா நேரத்திலும், உணர்ச்சி வசப்படாமல் சமபுத்தியுடனும் விவேகத்துடனும், தெய்வத்தின் நாமத்தை விடாமல், சொல்லிக்கொண்டு இருக்க வேண்டும் என்பதையே லட்சியமாக கொள்ள வேண்டும்.

கேள்வி: நான், நாமகீர்த்தனம் பல மாதங்களாக செய்து வருகிறேன். தாங்கள் பலமுறை நாமத்தால் சித்த சுத்தி ஏற்படும் என்று சொல்லி வருகிறீர்கள். சித்த சுத்தி ஏற்பட்டு விட்டதா என்பதை எவ்வாறு அறிவது?

பதில்: நாமகீர்த்தனம் செய்யும்போது, ஏற்படும் ஆனந்தத்தால் கண்களில் கண்ணீரும், மேனி சிலிர்ப்பும், தொண்டை தழுதழுத்தலும் ஏற்பட்டால், சித்த சுத்தி ஏற்பட்டதாக ஆகும். அதுவரை, விடாது நம்பிக்கையுடன் நாமகீர்த்தனம் செய்து வர வேண்டும்.

கேள்வி: பாகவத ப்ரவசனமோ, பஜனையோ எப்படி செய்ய வேண்டும்?

பதில்: மனிதர்களுக்காக, அதாவது மனிதர்களை திருப்தி செய்வதற்காக, செய்யும் பாகவத ப்ரவசனமோ, பஜனையோ ஒரு பலனையும் தராது. மக்களும் காலப்போக்கில்

**வேறொருவர் செய்யும் ப்ரவசனத்திலோ, பஜனையிலோ நாட்டம் கொண்டு, முன்பு செய்தவரை, மறந்தே விடுவர். இதனால், சொல்பவர்களுக்கு மனக்குறையும் அலுப்பும்தான் மிச்சம்.**

**ஆனால், பகவானுக்காக ப்ரவசனமோ, பஜனையோ செய்தால், அது பகவானுக்கு அலுக்காது. நமக்கும் அலுக்காது. மேலும் மேலும், ஆனந்த அனுபவத்தை அள்ளிக் கொடுப்பவன் பகவான். பகவானுக்காக செய்யும், பஜனையும் ப்ரவசனமும்தான் உத்தமமாகும்.**

சாலையில் ஒரு மரம் இருந்தது. சாலையை அகலப்படுத்துவதற்காக அந்த மரத்தை சாய்க்க வேண்டி இருந்தது.

அங்கு இருந்தவர்கள், ஒரே அடியில் இந்த மரம் சாய்ந்து விடும் என்று பேசிக் கொண்டார்கள். இதை கேட்டு கொண்டிருந்த, ஐந்து வயது நிரம்பிய மெல்லிய உடல் உள்ள ஒரு சிறுவன், அந்த மரத்தை ஒரு அடி போட்டான். அது அசையக்கூட இல்லை.

பக்கத்தில் இருந்த நல்ல பலம் உடைய ஒரு வாலிபர், அந்த மரத்தை ஒரு அடி போட்டார். அது சாய்ந்து விட்டது. ஏன்?

சரீர பலம் இல்லாதவர் அடித்தால், அது சாயவில்லை. அது போல், மனதில் நம்பிக்கை என்னும் பலத்துடன், பகவன் நாமம் சொன்னால், உடனே பலன் ஏற்படுகின்றது.

நம்பிக்கை என்னும் பலம் இல்லாமல், நாமம் சொன்னால், தாமதமாக பலன் ஏற்படுகின்றது.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 5

–ஸ்ரீ ஸ்வாமிஜி

16



பிரம்மா நாரதரிடம், "நாரத! என்னைக் காட்டிலும் மேலான அந்த பகவானை அறியாததால், நீ இவ்வாறு கூறுகிறாய். நீ என்னை பகவானென்று சொல்வதை முற்றிலும் பொருந்தாது என்றும் கூறி விட முடியாது"என்று கூறுகிறார்.

ஏனெனில் ஈஸ்வரன்போல் நீ கூறிய எல்லா பிரபாவங்களும் என்னிடம் உள்ளன. ஆனால், அவை எனக்கு ஸ்வபாவமாக கிட்டியவை இல்லை. அதை எனக்கு ஒருவர் அளித்தார். அந்த, எனக்கு மேலான ஈஸ்வரனை நீ அறிந்து கொள்ளாமல் என்னையே பகவானாக கூறுகிறாய். அவனை அறியாதவரை இந்த பிரபாவங்களெல்லாம் என்னுடையவைபோல் தோன்றும். சூரியன், அக்னி, சந்திரன், அஸ்வினி முதலிய நக்ஷத்திரங்களைப் பார்க்கும்போது அவைகள் ஸ்வயமாக பிரகாசிப்பதுபோல் தெரிகின்றன. ஆனால், வாஸ்தவத்தில் அவைகள் அந்த பகவானாலேயே பிரகாசிக்கப்படுகின்றன. அதேபோல்தான் பகவானாலேயே பிரகாசிக்கும்படி செய்யப்பட்ட இப்பிரபஞ்சத்தை நான் பிரகாசிக்கச் செய்கின்றேன். எவருடைய வெல்லவேமுடியாத மாயையால் என்னை ஜகத்குருவாக கூறுகின்றார்களோ, அந்த பகவானான வாசுதேவனுக்கு மனதால் நமஸ்காரம்' என்று கூறுகிறார். பிரம்மாவை ஜகத்காரணமாக கூறுபவர்கள், அறியாமையாலேயே அவ்வாறு கூறுகின்றனர். அந்த அறியாமையும் வெல்லமுடியாததுமான விஷ்ணு மாயையால் உண்டானது.

வெல்லமுடியாததான மாயை என பிரம்மா சொல்வதில் ஸ்வாரஸ்யம் உள்ளது. பிரம்ம மோஹன லீலையில் பிரம்மாவே விஷ்ணுமாயையில் அகப்பட்டு கொண்டாரல்லவா? அதனால்தான் அவரே "துர்ஜயயா மாயயா" என்று அவனது மாயையைப் பற்றி கூறுகிறார். பகவானே நம்மீது போட்டிருக்கும் மாயை, அவனது அருளின்றி விலகவே விலகாது.

விலஜ்ஜமானயா யஸ்ய ஸ்தாதுமீக்ஷாபதே(அ) முயா
விமோஹிதா விகத்தந்தே மமாஹமிதி துர்திய: 2.5.13

அந்த மாயை எவ்வளவு சிறுமையானது என்றால் பகவானின் திருஷ்டி விழும் இடத்திலிருந்து அது நிற்பதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு ஓடிவிடும். இந்த மாயையால் மோஹமடைந்த மூடர்கள் 'நான்', 'எனது' என்ற புத்தியைக் கொள்கிறார்கள்.

நாம் ஏதாவது தவறு செய்திருந்தால் யார் முன்பும் வர வெட்கப்படுவோமல்லவா! அதுபோல், உண்மைப் பொருளான பகவான் முன்பு பொய்யே உருவான மாயை நிற்கக் கூட வெட்கப்படுமாம். பகவானை எங்கெங்கு பார்த்தாலும் அங்கிருந்து வெட்கத்தினால் தப்பி ஓடி விடுமாம். 'நான்', 'எனது' என்ற இரண்டும் சகல ஸ்ருஷ்டியையுமே ஆட்டிப் படைக்கின்றன. இவை அந்த மாயையின் வலையே. 'நான்', 'எனது' நம்மை விட்டு விலகவேண்டுமானால், அது மாயை விலகினாலேயே சாத்யம். இந்த மாயை பகவான் திருகடாக்ஷத்தின் முன் நிற்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது. ஆக, பகவான் நம்மை கடாக்ஷித்துக் கொண்டே இருந்தால், மாயையால் நம் அருகில் கூட வர முடியாது.

'நாரத! உண்மையில் அந்த பரமாத்மாவான வாசுதேவனைத் தவிர வேறு ஒன்றும் இல்லவேயில்லை! ஸ்தூல பிரபஞ்சத்திற்குக் காரணமான மஹாபூதங்களோ, பிறவிக்குக் காரணமான கர்மாக்களோ, காலமோ, ஸ்வபாவமோ அல்லது அவைகளின் போக்தாவான ஜீவனோ இவை யாவுமே அந்த வாசுதேவனைத் தவிர ஒன்றுமேயில்லை.'

நாராயணபரா வேதா தேவா நாராயணாங்கஜா:
நாராயணபரா லோகா நாராயணபரா மகா: 2.5.15
நாராயணபரோ யோகோ நாராயண பரம் தப:
நாராயண பரம் ஞானம் நாராயணபரா கதி: 2.5.16


நான்கு வேதங்களும் நாராயணனையே குறிக்கின்றன. தேவர்கள் நாராயணனின் அங்கங்களிலிருந்து ஜனித்தவர்கள். ஸ்வர்காதி போக லோகங்களும் ஸ்ரீமன் நாராயணனின் ஆனந்தத்தின் ஒரு திவலையே. யாகங்களும் நாராயணனை குறித்தே செய்யப்படுகின்றன. அஷ்டாங்க யோகமும் பகவானையே குறிக்கோளாகக் கொண்டு செய்யப்படுகின்றது.

தவமும் அவனை நோக்கியே செய்யப்படுகின்றது. ஞானயோகத்தின் பலனும் நாராயணனே! எல்லா மார்கங்களும் நாராயணனிடமே அழைத்துச் செல்கின்றன.

அந்த பகவானுடைய கடாக்ஷ மாத்திரத்தினாலேயே, அவரது சிருஷ்டியான நான் இந்த பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கிறேன். அவர் என்னை பார்க்க மட்டுமே செய்தார். வாய் மலர்ந்து சிருஷ்டி செய் என்று கூட சொல்லவில்லை! ஆனால், சூரியகிரணங்கள் பட்ட உடன் தாமரை மலர்வதைபோல், அவரது கடாக்ஷம் பட்ட உடன் எனக்கு சிருஷ்டி செய்ய வேண்டும் என்ற சங்கல்பமும், அதற்கான ஞானமும் பொருளும், எல்லாம் வந்துவிட்டன. அனைத்துமே ஸத்ஸங்கல்பங்கள். ஸங்கல்ப மாத்திரத்தில் சிருஷ்டியும் ஆகிவிட்டது. எந்த ஒரு ஸங்கல்பமும் வீணாகவே இல்லை.

அந்த பகவான் சர்வ சாக்ஷியும், சர்வ சக்தனும், மாற்றமே அடையாதவராகவும், எல்லோருக்கும் ஆத்மாவாகவும் இருக்கிறார். அவரது சாந்நித்ய மாத்திரத்தில், தூண்டுதலால் நான் இந்த ஸ்ருஷ்டியை செய்கிறேன். என்னுடைய மனதில் தானாகவே ஸங்கல்பங்கள் தோன்றுவதை நான் சாட்சியாகப் பார்க்கின்றேன். அவைகளில் உபயோகமில்லாத சங்கல்பங்களே இல்லை. அந்த சங்கல்பங்கள் தானாகவே நிறைவேறுவதையும் சாட்சியாகவே பார்க்கின்றேன்.

பகவான் அனந்தன்; எல்லை இல்லாதவன். உண்மையில் அவன் முக்குணங்களான ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸிற்கு அப்பாற்பட்டவன். சிருஷ்டி, ஸ்திதி, லயத்திற்காக மாயையினால் இவை கிரஹிக்கப்படுகின்றன. உண்மையில் முக்தனாகவே இருந்த போதிலும், மாயை காரணமாக ஒரு ஜீவன், ஜீவத்வத்தை அடைகிறது. அந்த ஜீவன் ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்ற இந்த மாயையின் குணங்களான அத்யாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம் என்ற தன்மைகளால் கட்டுப்பட்டவனாகின்றான். இதனால், அவனுக்கு தேஹம், மனம், இந்திரியங்கள் எல்லாவற்றிலும் ‘தான்’ என்ற எண்ணம் வந்துவிடுகிறது. இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட அந்த பகவான், தன்னை இம்மூன்று குணங்களுக்குப் பின்னால் தன்னை நன்கு மறைத்து கொண்டிருக்கிறார். (கனியும்)




**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# சத்திய சாதனை

- அச்சு

நமது சாஸ்திரங்கள் காட்டும் உண்மைகளை, எளிமையான அனுபவபூர்வ நிகழ்வுகள் மூலம் காட்டுவது ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் தனித்தன்மை. பரமஹம்ஸருக்கு ரத்தினமான பல சீடர்கள். ராமகிருஷ்ண பரமஹம்ஸர், தமது பிரிய சிஷ்யரான ராக்காலிடம் மிகவும் கண்டிப்பாக இருப்பார். அவரது ஒவ்வொரு செயலையும், கூர்மையாக கண்காணிப்பார். ராக்காலிடம் ஒரு சிறு தவறு தென்பட்டாலும், அதை திருத்துவதற்காக ராக்காலை திட்டவும் தயங்க மாட்டார். இந்த ராக்கால்தான், பின்னர் உலகமே போற்றும் பிரும்மானந்தாவாக இருந்தவர்.

ஒருநாள் ராக்கால் குருதேவரின் முன்னர் வந்தவுடன் அவரை பார்த்து பரமஹம்ஸர் "என்ன செய்து விட்டு வந்தாய்? உன் முகத்தில் ஏன் ஒரு கருமையான நிழல் தெரிகிறதே" என்றார். ராக்காலோ தான் யாதொரு தவறான காரியமும் செய்யவில்லை என்று பதில் தந்தார்.

பரமஹம்ஸரோ விட்டபாடில்லை! "என்னென்ன காரியங்களை எல்லாம் இன்று செய்தாய். சொல் சொல்!" என்று கேட்டுக்கொண்டே இருந்தார். தொடர்ந்து இப்படி குருதேவர் கேள்வி கேட்க கேட்க, கொஞ்ச நேரம் கழித்து ராக்கால் "விளையாட்டுக்காக ஒரு பொய் சொன்னேன். வேறு ஏதும் நான் தவறு செய்ததாக தெரியவில்லை" என்றார்.

ராமகிருஷ்ணர் உடனே "இனி விளையாட்டுக்கு கூட பொய் சொல்லாதே. விழிப்புடன் இரு. நீ பொய் சொன்னதால்தான், உன் முகத்தில் கருமையான நிழல் படுகிறது" என்று ராக்காலை பார்த்து சொன்னார்.

ஆன்மீகத்தில் முன்னேற ஆசைப்படுபவர்களுக்கு வாய்மை என்பது எவ்வளவு முக்கியமான 'யமம்' என்றும், ஒரு சிறு விஷயத்திற்காக கூட பொய் சொல்லலாகாது என்றும், அழகாக காட்டி விட்டார் பரமஹம்ஸர்!

# அன்பு ஒன்றினால் .......

- ஸ்ரீபத்மபாதர்

ப்ருந்தாவன திவ்ய தாமம்! முழுநிலவு தன் குளிர்ந்த கிரணங்களை வீசிய வண்ணம் இருந்தது. ஜில் என்ற தென்றல் வீசி மரம், செடி, கொடி, எல்லாவற்றையும் களிப்புற செய்தது. யமுனையின் குளிர்ந்த தரங்கங்களின் கரையில், ஒரு அழகிய ஆலமரம். அங்கு கண்ணன் தீங்குழல் ஊத, கோபியர் வந்து சூழ்ந்து கொண்டனர். ஒரு ப்ரேம சல்லாபம் தொடங்கியதும் ஆச்சரியமோ? ஸ்ரீகிருஷ்ணனை பார்த்து கோபிகள், "உலகில் ஒருவருக்கொருவர் எதனால் பிரியம் ஏற்படுகிறது" என்று கேட்கின்றனர். அதற்கு கிருஷ்ணன் கோபிகளை பார்த்து, "உலகில் மக்கள் ஒருவரினால் என்ன ஆதாயம் ஏற்படும் என்று கணக்கிட்டே பழகுகின்றனர். உண்மையான பிரியம் என்பதோ மிக அபூர்வமானது. குழந்தைகளிடம் தாயும், தந்தையும் எதையும் எதிர்பாராது அன்பு காட்டுகின்றனர். எங்கு ப்ரியம் இருக்கிறதோ, அங்கு தியாகம் என்பது இருக்கும். அன்பிற்கு தியாகம் என்பதுதான் அடிப்படை. தியாகம் இல்லாத இடத்தில் அன்பு உதிப்பதில்லை" என்று சிரித்தபடியே பதில் தருகிறான்.

அதைக் கேட்ட கோபிகள் கண்ணனை பார்த்து, "அப்படி எனில், அன்பிற்கு பிரதியாய் அன்பு காட்டாதவர்கள் எப்படிப்பட்டவர்கள்" என்று கேட்கின்றனர்.

கோபிகள் கண்ணனை நினைத்து உருகியபொழுதும், உடனே, கண்ணன் அவர்களுக்கு தரிசனம் தராதிருந்தான். அதனாலேயே இந்த கேள்வியை அவர்கள் கேட்டனர்!

கண்ணன் கோபிகளின் கேள்வியை ரசித்தவாறே பதிலுரைத்தான். "அன்பு செலுத்தியும் திருப்பி அன்பு செலுத்தாதவர்கள் நால்வகைப்படுவர். ஒருவர் சமாதி

அனுபவத்தில் இருக்கலாம். அவருக்கு ஒருவர் அன்பு செலுத்துவதே தெரியாது. அவர் முதல் வகை. சிலரோ விரக்தர்களாக இருப்பார்கள். அவர்கள் மேல் அன்பு செலுத்தினாலும், அவர்கள் அதை அலட்சியப்படுத்தி விடுவார்கள். பிரதியாய் அன்பு செலுத்தினால், அது தங்கள் வைராக்கியத்திற்கு தடை என்று நினைப்பதினால் அப்படி இருப்பார்கள். அவர்களிடம் அன்பு காண்பிக்க முடியாது. மூன்றாமவன் முட்டாள். அவன் எதையும் ரசிக்க தெரியாதவன். அவனிடம் செலுத்தும் அன்பு வீணானது. மற்றொரு வகையினரோ ப்ரேமையை மதிக்க தெரியாதவராயிருப்பர். இவர்கள் மூர்க்கர். மேற்கண்ட நால்வரிடம் அன்பு செலுத்தினாலும், திருப்பி அன்பு செலுத்தாமலிருப்பர்" என்றான் கண்ணன்.

கோபிகளோ அப்பொழுதும் விடாமல், குறும்பாக "கண்ணா நீ எந்த ரகம்? நாங்கள் அன்பு செலுத்தியும் எங்களிடமிருந்து பிரிந்து சென்றாயே" என்று கேட்டனர்.

அதற்கு மதுர அமுத வசனத்தால் கண்ணன், "இதில் எந்த வகையிலும் நான் சேராதவன்! என்னிடம் ஒரு சிறு துளசி தளத்தை சமர்ப்பித்தாலும் நான் ஓடோடி வந்து விடுவேன்! அப்படி இருக்கையில், நீங்கள் என் மேல் அன்பு கொண்டிருப்பதையோ, என்னையே நினைத்து உருகுவதையோ, என்னையே கீர்த்தனம் செய்து வருவதையோ, என்னை பற்றியே பேசி வருவதையோ, நான் முழுவதும் அறியாதவனா என்ன? உங்கள் அன்பை நான் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன்! அப்படி எனில், ஏன் உங்கள் முன் வரவில்லை என்றால், அப்படி வந்து விட்டால் நீங்கள் செய்யும் பக்தியானது நின்று விடுமல்லவா? உங்கள் அன்பை மேலும் வளர்க்கவே நான் உங்கள் முன் தோன்றாது, நீங்கள் செய்யும் அன்பை அறிந்தும், அறியாதவனாக இருப்பது போல் இருந்தேன்" என்றான் அந்த மாயக்கண்ணன்!

# ஸ்ரீவேதாரண்யத்தின் சிறப்பு

- ஸ்ரீபத்மபாதர்

---

இத்திருத்தலம், சோழநாட்டு காவேரி கரையில் உள்ள தலங்களுள் 125வது திருத்தலமாகும்.

ஸ்வாமி பெயர்: மறைக்காட்டீஸ்வரர்
வேதாரண்யேஸ்வரர்
வேதவனேசர்
வேதாரண்ய நாதர்

அம்பாள் பெயர்: வீணாவாத விசாஷிணி
யாழைப்பழித்த மொழியம்மை

ஸ்ரீஆதிசங்கரர் தேவியின் மகிமையை வர்ணித்து, நூறு ஸ்லோகங்களில், சௌந்தர்யலஹரி என்ற ஒரு நூல் எழுதி உள்ளார்.

ஒருசமயம் தேவியினுடைய சபையில் சரஸ்வதி, பரமேஸ்வரனின் தட்சனுடைய வேள்வியை அழித்தல், விஷம் குடித்தது, திரிபுர விஜயம் போன்ற லீலைகளை வீணையில் வாசித்தாள்.

இசைக்கருவிகளிலேயே சிறந்தது வீணை. அதை வாசிப்பதிலேயே சிறந்தவள் சரஸ்வதி. அப்படி சரஸ்வதி வாசித்து கொண்டிருக்கும்பொழுது, தேவி தன்னை மறந்து, வீணா கானத்தை வாயை திறந்து பாராட்டி, சில வார்த்தைகள் உரைத்தாள்.

உடனே, சரஸ்வதி, தான் வீணை வாசிப்பதை நிறுத்தி உரையில் இட்டு விட்டாள். தேவி, வாணியை பார்த்து, "ஏன் வீணை வாசிப்பதை நிறுத்தி விட்டாய்" என்று கேட்டாள்.

உடனே வாணி தேவியை பார்த்து, "உன் வாயினில் இருந்து வந்த மொழியின் இனிமையான குரல், என் வீணா

கானத்தை விட இனிமையாக இருந்ததால், நான் இனி வீணை வாசித்தால் அது எடுபடாது'' என்று சொன்னாள். இதை சௌந்தர்ய லஹரியில்.

விபஞ்ச்யா காயந்தீ விவித மபதாநம் புரரிபோ:(பசுபதே)
த்வயா-[ஆ]ரப்தே வக்தும் சலித சிரசா சாது-வசநநே

ததீயைர்-மாதுர்யை-ரபலபித -தந்த்ரீ கலரவாம்
நிஜாம் வீணாம் வாணி நிசுலயதி சோலேந நிப்ருதம்:

என்ற ஸ்லோகத்தில் கூறி உள்ளார். இந்த சம்பவத்தை ஒட்டியே, இந்த ஊரில் உள்ள அம்பாளுக்கு, வீணாவாத விசாஷிணி அல்லது யாழைப்பழித்த மொழியம்மை என்று பெயர் அமைந்துள்ளது.

---

## சனாதனப்புதிர் பகுதி 65 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

---

**1.** பலவிதமான விரதங்கள் அனுஷ்டிக்கும் முறைகள் விரிவாக எங்கே சொல்லப்பட்டு இருக்கின்றன.

**2.** ஹேமாத்ரி என்ற தர்ம சாஸ்திர நூல் 4மஹாபாதகங்களுக்கு பிராயச்சித்தம் இல்லை என்று சொல்கிறது. அந்த பாவங்கள் எவை?

**3.** நமஸ்காரம் எத்தனை வகைப்படும். அவை என்ன?

**4.** கந்தபுராணம் என்ற நூலை இயற்றியது யார்?

**5.** முருகனை பற்றிய கதைகள் சங்க நூலில் காணப்படுகிறது. எந்த நூல்? உரை ஆசிரியர் யார்?

**6.** திருத்தணி மலை ஸ்ரீகந்த புராணத்தில் என்ன பெயருடன் காணப்படுகிறது.

**7.** சுந்தரவல்லி, லவலீநாயகி இந்த பெயர்கள் யாரை குறிக்கின்றன?

**8.** கஜனாயிகை - இவர் யார்?

**9.** ஸ்காந்த புராணத்தில் எத்தனை சம்ஹிதைகள் - என்ன பெயர் - எத்தனை ஸ்லோகங்கள்?

**10.** சிவ சஹஸ்ர நாமம் ஸ்காந்த புராணத்தில் எங்கு காணப்படுகிறது?

# வீடு தேடி வருவான் விட்டலன் – 7

## தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

ஒரு தெய்வத்தை, ஒரு பக்தன் எப்படி உபாசிப்பானோ அப்படி இந்த புண்டலீகன், தன் பெற்றோர்களை பார்த்துக் கொண்டான். பல் துலக்கி விடுவது, குளிப்பாட்டுவது, வஸ்திரம் மாற்றுவது, ஆகாரம் சமைப்பது, ஆகாரம் கொடுப்பது, கால் பிடித்து விடுவது, சிரமப்பரிகாரம் செய்ய வைப்பது என்று அனைத்து காரியங்களையும் மிகவும் ஈடுபாட்டுடனும், கருத்துடனும் செய்து தன் பெற்றோர்களை சந்தோஷமாக பார்த்துக் கொண்டான். அவர்கள் இவன் மேல் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். குக்குட மஹரிஷி சொன்ன சொல்லை, இவன் காப்பாற்றினான். அவர் சொன்ன சொல்லை தெய்வமும் நிறைவேற்றியது. புண்டலீகன் பண்டரீபுரத்துக்கு வந்த காலமும், கண்ணன் துவாரகையை ஆண்ட காலமும் ஒன்று.

திரிலோக சஞ்சாரியான நாரதர், தம் வீணையை மீட்டிக் கொண்டே நாமசங்கீர்த்தனம் செய்தவாறே, ஒருநாள் கண்ணனை பார்க்க துவாரகைக்கு பஜனை பாடியபடியே வந்தார். கண்ணன் அன்று கொஞ்சம் கவலையுடன் இருந்தாற்போல் பட்டது நாரதருக்கு. பிறந்தது முதல் ஆபத்துக்களையும், கஷ்டங்களையும் பார்த்து வந்த கண்ணன் ஒருநாளும் துக்கித்தான், அழுதான், வேதனைப்பட்டான் என்று கிடையவே கிடையாது. இது கிருஷ்ணாவதாரத்திற்கு ஏற்றம். அவனுக்கு கஷ்டமோ துக்கமோ வராமலில்லை. அவனுக்கு வந்த ஆபத்துக்களும் அநேகம். ஆனால், அவன் ஒருநாள் சோர்வாய் உட்கார்ந்தான் என்று கிடையவே கிடையாது.

அப்படிப்பட்ட கிருஷ்ணன் முகம் வாடி இருப்பதைப் பார்த்த நாரதர், "கண்ணா ஏன் உன் முகம் வாடி இருக்கிறது?" என்றார். கண்ணன் தன் கவலைக்கு காரணத்தை சொன்னான். "உலகில் சாதாரணமாக பிறக்கும் குழந்தைகளை பெற்றோர்கள் கொஞ்சுகின்றனர். குழந்தை இல்லாமலிருந்தால் அது எவ்வளவு பெரிய துக்கம்? குழந்தைப்பேறு வேண்டும் என்பதற்காக விரதம்

இருந்து பிறந்தால், அதில் அவர்களுக்கு ஏக சந்தோஷம். அந்த குழந்தையை கொஞ்சி, கொஞ்சி வளர்க்கின்றனர். அந்த குழந்தையும், தனது மழலை பேச்சுக்களால், பெற்றோரை மகிழ்விக்கிறது. இது இப்படி இருக்க, நானோ பிறவியே எடுக்காதவன். என்னை தவம் செய்து வசுதேவரும், தேவகியும் பெற்றெடுத்தனர். காராக்ருஹத்தில் பிறந்த அன்றே, நான் கோகுலத்திற்கு சென்றுவிட்டேன். ஒருநாள் கூட நான் பெற்றோரை மழலை சொற்களால் அப்பா, அம்மா என்று கூப்பிடவில்லை. அவர்களும் ஒருநாளும் என்னை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு, அன்னம் ஊட்டி விட்டதில்லை. அவர்களுடன் இருந்து, நான் நடை பழகவில்லை. உலா போகவில்லை. இது எல்லாம் ஒரு பக்கம் இருக்க, நான் பெரிதானவுடன் எனக்கு ஏக கடமைகள் வந்து விட்டன. அதனால், என் பெற்றோர்களுக்கு வயதானபின்பு, அவர்களுக்கு என்னால் சேவை செய்ய முடியவில்லை. இதனால் என் மனம் சாந்தியடைய மறுக்கிறது. அதை குறித்துதான் யோசிக்கிறேன் என்றான் கண்ணன்.

நாரதர் : அதற்கு என்ன செய்ய முடியும் பகவானே?

கண்ணன் : ஒன்று செய்தால் என் மனம் சாந்தியுறும்.

நாரதர் : என்ன அது?

கண்ணன் : பெற்றோரை தெய்வமாக சிரத்தையாக நினைத்து சேவை செய்து வரும் ஒருவனைப் பார்த்தால், என் மனம் சாந்தியுறும். அப்படி ஒருவனைப் பார்த்தால், அவன் சேவை செய்வதைப் பார்த்தால், அதைப் பார்த்து என் மனதை கொஞ்சம் சாந்தப்படுத்திக் கொள்வேன். மூவுலகும் சென்று வரும் நாரதரே! அப்படி ஒருவர் இருக்கிறாரா? உமக்குத் தெரியுமா?

நாரதர் : ஏன் இல்லை?

கண்ணன்: எங்கிருக்கிறான்?

நாரதர்: தென்னிந்தியாவில் இருந்து காசி யாத்திரை கிளம்பிய புண்டலீகன் எனும் பக்தன், பண்டரீபுரம் எனும் க்ஷேத்திரத்தில் தனது பெற்றோர்களுக்கு நீ சொல்வது போல் அவர்களை தெய்வமாக பாவித்து, சேவை செய்து வருகிறான்.

கண்ணன் : அப்படியா! உடனே கிளம்புங்கள் நாரதரே. அங்கு போவோம்.

(தொடரும்)

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruaram Consulting Private Ltd**

# சம்ஸ்க்ருதி மற்றும் புராநவா

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், வருடாவருடம் காட் இந்தியா டிரஸ்டால் நடத்த பெற்று வரும் **புராநவா** மற்றும் **சம்ஸ்க்ருதி** மிகவும் வெற்றிகரமாக மூன்றாம் வருடமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளை காட் இந்தியாவின் இளம் அங்கத்தினர்களான டாக்டர் ஜனனி வாசுதேவன், ஹர்ஷிணி, ஆடிட்டர் சனத்குமார், விக்னேஷ் சுந்தர்ராமன் ஆகியோர் அழகாக ஒருங்கிணைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் காட் இந்தியா டிரஸ்டால் தொடர்ந்து மூன்றாம் வருடமாக ஜூலை 27அன்று **Annual Heritage Fest - சம்ஸ்க்ருதி '14** நடத்தப்பெற்றது. பண்டைய காலத்தில் பாரதம் இருந்ததை ஒட்டி நடந்த ஏழு விதமான கலைப்போட்டிகளில் 55பள்ளிகளில் இருந்து 750மாணாக்கர்கள் உற்சாகமுடன் கலந்து கொண்டனர். இது தியாகராய நகர் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் நடைபெற்றது. பானையில் ஓவியங்களை வரைந்து அதில் இசை, நாட்டியம், கிராமியக்கலை ஆகியவற்றை எடுத்து காட்டுவதில் மாணாக்கர்களுக்கு அதிகம் ஆர்வம் இருந்தது.

ராமானுஜம்ஜி இந்த போட்டி நடைபெறுவதன் அவசியம் குறித்து எடுத்து பேசி, ஆசிரியர்களையும் பெற்றோர்களையும், இப்போட்டியில் கலந்து கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும்படி கேட்டு கொண்டார். நிஷாஜி மற்றும் பிரியாஜி போட்டியில் தேர்வு தகுதிக்கு கையாண்ட புதுமைகளை பற்றி பேசினர். அதிக வெற்றி மற்றும் அதிக போட்டியாளர்களுக்கான பரிசு ஹரிஸ்ரீ வித்யாலயத்திற்கு மணிகண்டன்ஜியால் வழங்கப்பெற்றது. எம்.ஓ.பி. வைஷ்ணவா காலேஜிலிருந்து வந்திருந்து பணியாற்றியோரை நிர்வாகிகள் சிறந்த ஒத்துழைப்பு தந்தமைக்காக பாராட்டினர்.

**புராநவா '14, The Annual Inter school Heritage quiz** இம்மாதம் ஆகஸ்டு 2 அன்று சென்னை சின்மயா ஹெரிடேஜ் சென்டரில் நடைபெற்றது. மூவர் அணி கொண்ட நூற்றைம்பது குழுக்களாய் மாணவர்கள் இப்போட்டியில் 65பள்ளிகளில் இருந்து கலந்து கொண்டனர். மாணாக்கர்கள் அவரவர் பள்ளி சீருடையில் வந்திருந்தது பாரதத்தின் '*Unity*

***in Diversity'*** ஐ ஞாபகப்படுத்தியது. இந்திய தேசம் மற்றும் சென்னையின் வரலாறு, சனாதன தர்மம் குறிப்பாக ராமாயணம் மற்றும் ஸ்ரீமத் பாகவதம் ஆகியவற்றில் இருந்து இறுதி சுற்றில் கேள்விகள் கேட்கப்பட்டன. ராமானுஜம்ஜி இந்த புதிர் போட்டியை காண வந்திருந்தோருக்கு, சுவையான தகவல்களை தந்தவாறே அழகாக நடத்தி சென்றார். விறுவிறுப்பான போட்டியுடன் முடிவுற்ற இதில் மஹரிஷி வித்யா மந்திர் முதலிடத்தையும், ஏ.எம்.எம் மெட்ரிகுலேஷன் பள்ளி இரண்டாமிடத்தையும் பெற்றது.

சமயம் மற்றும் வரலாற்றை சேர்த்து தொகுக்கப்பட்டிருந்த இந்த போட்டி வினாக்களை, மாணாக்கர்களும் பெற்றோர்களும் நன்கு ரசித்தனர். மணிகண்டன்ஜி மற்றும் ஹரிஹரன்ஜி மாணாக்கர்களுக்கு பரிசுகள் வழங்கினர். ஜி.ஆர்.டி ஹோட்டல் நிறுவனம் அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்திருந்தது.

சம்ஸ்க்ருதி மற்றும் புராநவா போட்டிகளின் விவரங்கள் பல நாளேடுகளில் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்திரேலிய நியூசிலாந்து சத்சங்கங்கள்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன் ஆஸ்திரேலியாவிற்கு நாமப்பணிகளுக்காக சென்று வந்த பூர்ணிமாஜி ஜூலை 19-20 தேதிகளில் அடிலெய்டு கணபதி கோவிலில் நாமசங்கீர்த்தனத்தின் பெருமைகள் என்ற தலைப்பில் உபன்யாசம் செய்தார். ஜூலை 27 அன்று அவர் முன்னிலையில் நியுசிலாந்து வெல்லிங்டனில் முதன்முறையாக மஹாமந்திர கீர்த்தனம் அறுபது அன்பர்கள் பங்கேற்க அகண்டமாக நடைபெற்றது.

ஆகஸ்டு 3-9 வரை ஆக்லாந்தில் மிக விமரிசையாக பூர்ணிமாஜியின் முன்னிலையில் ஸ்ரீமத்பாகவத சப்தாஹம் நடைபெற்றது. திரளான அன்பர்கள் வந்திருந்து ஏழு நாட்களும் சாந்தி நிவாஸ் சென்டரில் அவர் செய்த உபன்யாசத்தை கேட்டு இன்புற்றனர். இது தவிரவும் பல இல்லங்களில் பாகவதத்திலிருந்து பல கதைகளை சுவையாக எடுத்து சொல்லி சத்சங்கங்களை அவர் நிகழ்த்தினார்.

# பாலகர்களுக்கு ஒரு கதை



## குணம் நாடு!

அன்பு இல்லம் எனுமொரு ஆஸ்ரமத்தை ஒரு சத்குரு நடத்தி வந்தார். அந்த குருவானவர் மிகவும் எளிமையானவர். ஆழ்ந்த அறிவையும், தடையற்ற அன்பையும் ஒருங்கே கொண்டவர். சீடர்களை அவர் திருத்தி மாற்றுவதும் வெகு அழகாக இருக்கும். சீடர்கள் அதனால், வெகு எளிதில் குருநாதரிடத்தில் பிரியம் கொண்டவர்கள் ஆனார்கள். அவர் பிரியமுடன் எதையும் சொன்னதால், அதை அந்த சிஷ்யர்களின் மனம் முழுமையாக ஏற்று கொண்டது.

அந்த குருவை, ஒரு வயதான தம்பதிகள் ஒருமுறை தங்களது வீட்டிற்கு அழைத்திருந்தார்கள். அங்கு செல்கையில் குருவானவர் நசிகேதன் என்றொருவனை அழைத்து "நீயும் என்னுடன் வா" என்று அழைத்துச் சென்றார். நசிகேதன் எப்பொழுதும் அவசரமாய் முடிவுக்கு வருவான். ஒரு விஷயத்தை முழுவதுமாக ஆராயாது, அவசர முடிவு எடுப்பது அவன் இயல்பாய் இருந்தது.

குருவும் நசிகேதனும் அந்த தம்பதிகளின் வீட்டிற்கு வந்தனர். அங்கு அந்த வயது முதிர்ந்த தம்பதிகள், வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். குருவை வரவேற்க கையில் மாலையும் மங்கள திரவியங்களும் வைத்திருந்தார்கள். குருநாதர் அதை அங்கீகரித்து ஏற்று கொண்டார். அவர்களை பார்த்து புன்னகை பூத்தார். "எப்படி இருக்கிறீர்கள்" என்று கேட்டுக்கொண்டே, உரிமையுடன், அவர்களின் இல்லத்திற்குள் நுழைந்து ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

மேலும் இரு நாற்காலிகள் அங்கு இருந்தன. குருவானவர் சற்றும் தாமதிக்காமல், அந்த நாற்காலிகளை காண்பித்து, "உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்றார். அவர்களும் மறு பேச்சு பேசாமல், உட்கார்ந்து கொண்டனர்.

அப்பொழுதுதான், நசிகேதன் மற்றொன்றையும் கவனித்தான். வீடு அவ்வளவு சுத்தமாக இல்லை. அங்கும் இங்கும், கொஞ்சம் துணிகளும் பேப்பர்களும் பொருட்களும்

கீழே கிடந்தவாறிருந்தன. நசிகேதன் அதை பார்த்து, தன் மனதினுள்ளாக "அட! என்ன இவர்கள். குருவை பார்த்து நமஸ்கரிக்கவில்லை. மரியாதையாக நிற்கவும் இல்லை. உட்கார சொன்னால், அவருக்கு சமமாக உட்கார்ந்து கொண்டனர். குரு வருகிறாரே என்று வீட்டை சுத்தம் செய்யவில்லை. இப்படியும் இருப்பரோ" என்று நினைத்து கொண்டான்.

ஒரு அரை மணி நேரம் பேசி விட்டு கிளம்பினார் சத்குரு. அந்த வயதான தம்பதிகளின் முகம், முழுதாக அப்பொழுதுதான் மலர்ந்த தாமரை போலிருந்தது. அவர்கள் முகத்தில், மகிழ்ச்சி அமைதியுடன் கலந்து உறவாடியது. குருவின் முகமோ மிகுந்த அன்பை வெளிப்படுத்தியது. அக்கறை, பாசம், அன்பு, கருணை எல்லாம் அதில் தென்பட்டன.

விடைபெற்று திரும்பி வருகையில் எல்லாம், நசிகேதன் நடந்தவைகளையே நினைத்து கொண்டிருந்தான். அப்பொழுது குரு எதையோ நினைத்தவராய், "இன்று பாகவத பாராயணத்தில் ஒரு சுவையான விஷயம்; உத்தவன் கண்ணனை பார்த்து குணம் என்றால் என்ன என்று கேட்க, கண்ணன் குணதோஷத்தை பாராதிருப்பது குணம்; குணதோஷத்தை பார்ப்பதே தோஷம் என்கிறான். எவ்வளவு இனிமையாக கண்ணன் பேசுகிறான் பார்" என்றார். தனது குழந்தையை போல நசிகேதனை நடத்திய அந்த குரு தொடர்ந்து, "நசிகேதா! இந்த வயதான பெரியவர்களை எனக்கு பல வருடங்களாக தெரியும். பாவம்! அவர்களால் குனிய முடியாது. முதுகில் அவர்களிருவருக்குமே ஒரே மாதிரியான பிரச்சனை. அதனால்தான், வீட்டில் தரையை பார்த்தால், கொஞ்சம் அலங்கோலமாக இருக்கும். தங்களுக்கு தேவையானதை எல்லாம் கை எட்டும் தூரத்தில் அலமாரிகளிலேயே வைத்திருப்பர். அவர்கள் ஏதாவது ஒரு பொருளை கீழே தவற விட்டால், யாராவது விருந்தாளிகள் வரும்பொழுது, அவர்களை கொண்டே, அதை அவர்களால் எடுத்து பழைய இடத்தில் வைக்க முடியும்" என்றார்.

நசிகேதனுக்கு அதை கேட்டவுடன், மனது கூனி குறுகி

போய் விட்டது. "அடடா! தப்பாக அல்லவா அந்த வயதான பெரியவர்களை எடை போட்டு விட்டோம்" என்று நினைத்தான். சில நிமிடங்கள் கழித்து, குரு அவனை பார்த்து, "இப்படி ஒருமுறை வந்தபொழுது அவர்கள் நமஸ்காரம் செய்கையில் எழவே முடியாமல் கஷ்டப்பட்டனர். அதை பார்த்த நான் இனி அவர்கள் நமஸ்காரம் செய்யக்கூடாது என்று தெளிவாக உத்திரவிட்டிருந்தேன்" என்றார். "வா! உனக்கு நடந்து வந்ததால் பசி ஏற்பட்டிருக்கும். உணவருந்து" என்று தொடர்ந்தார்.

குருவின் அன்பை நினைத்து வெட்கி போனான் நசிகேதன். தனது அவசர புத்தியையும், எல்லாவிடத்திலும் முதலில் குற்றத்தையே நோக்கும் மனப்பாங்கையும் நீக்கி அருளுமாறு, தன் குருநாதரிடம் மனதினால் வேண்டிக் கொண்டான். ஏனோ தெரியவில்லை. அதே கணம் ஸத்குரு, நசிகேதனை பார்த்து ஒரு புன்முறுவல் பூத்தார்!

---

## சனாதனப்புதிர் பகுதி 65 - விடைகள் -ஆத்ரேயன்

**1.** பிரம்மோத்தர காண்டம் - ஸ்ரீஸ்காந்தம்

**2.** பொன்னை திருடுவது; மத்யபானம் செய்வது; குருவின் மனைவியோடு இருத்தல்; பிரம்மஹத்தி என்ற நான்கு பாதகங்கள்.

**3.** நான்கு வகைப்படும். அஷ்டாங்கம், பஞ்சாங்கம், திரியங்கம், ஏகாங்கம்.

**4.** காஞ்சிபுரத்தில் இருந்த கச்சியப்ப சிவாச்சாரியார்.

**5.** பரிபாடல், பரிமேலழகர்

**6.** ஸ்ரீபரிபூர்ண மலை - யுத்தகிரி என்ற பெயர்களில்.

**7.** முருகக்கடவுளின் மனைவியான வள்ளியம்மை

**8.** தேவஸேனா என்ற முருகனின் மனைவி

**9.** ஸனத்குமார ஸம்ஹிதை - 55000; சூத - 6000; ப்ரும்ம - 3000; விஷ்ணு - 5000; சங்கர - 30000; சௌர ஸம்ஹிதை - 1000; மொத்தம் 100000.

**10.** சங்கர சம்ஹிதை - சிவரஹஸ்ய கண்டம் - உபதேச காண்டம் - 83வது அத்தியாயம். 180ஸ்லோகங்கள்.

**ஆகஸ்டு** 2 சென்னை மயிலை பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் உலக நன்மைக்காக நடைபெற்ற பக்தி சங்கீத உற்சவத்தை துவக்கி வைத்து ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

**ஆகஸ்டு** 3-6 தஞ்சாவூர் நவநீத கிருஷ்ணன் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பக்த விஜய உபன்யாசம் செய்தருளினார்கள். இதில் திரளான அன்பர்கள் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**ஆகஸ்டு** 17-26 மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு இருபத்து ஒன்றாவது ப்ரும்மோத்ஸவம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. தினமும் வித வித வாகனங்களிலும் பல்லக்கிலும் புறப்பாடு, திருமஞ்சனம், பாகவத பாராயணம், உஞ்சவ்ருத்தி, திவ்யநாம கீர்த்தனம் நடைபெற்றது. நிகுஞ்சோத்ஸவத்தன்று திரு.நெய்வேலி சந்தானகோபாலனின் புதல்வி செல்வி.ரஞ்சனி ப்ரேமிகவரதன் முன் அருமையாக ஊத்துக்காடு கிருஷ்ண கீர்த்தனங்களை பாடினார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பாகவத தசம ஸ்கந்த உபன்யாசம் செய்தருளினார்கள். பெருந்திரளான அன்பர்கள் கலந்து கொண்டு ஆனந்தித்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர். அனைவருக்கும் விமரிசையாக மூன்று வேளையும் ஆஸ்ரமத்தில் அன்னதானம் செய்யப்பட்டது.

**ஆகஸ்டு** 15 - G.O.D இந்தியா டிரஸ்ட் மற்றும் தூத்துக்குடி ஸ்ரீசக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை சார்பாக, மணிமங்கலம் மற்றும் மஹாரண்யம் கிராம அரசு பள்ளிகளில், சிறப்பாக தேர்ச்சி பெற்ற, மாணாக்கர்களுக்கும், பள்ளி சிறப்பாக தேர்ச்சி பெற உழைத்த ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. G.O.D இந்தியா டிரஸ்ட் சார்பாக, Dr.பாக்யநாதன்ஜியும், தங்கள் குமாரன் ஸ்ரீனிவாசன் நினைவாக ஸ்தாபித்த தூத்துக்குடி ஸ்ரீசக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை சார்பாக, திரு.கண்ணன் அவர்களும் பங்கேற்றனர்.

**ஆகஸ்டு** 1-9 முரளிஜி நெய்வேலி டவுன்ஷிப்பில் ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம் செய்தார். 300க்கும் மேலான அன்பர்கள் தினமும் ஸ்ரவணம் செய்து ஆனந்தித்தனர். பூர்த்தி தினத்தன்று நகரசங்கீர்த்தனமும் இடம்பெற்றிருந்தது.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி



## ஸ்ரீஸசீநந்தனதாஸ் பாபா -1

**1974**ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார் ஸ்ரீஸசீநந்தனதாஸ் பாபா. அப்பொழுது அவரது வயது **112.** வ்ரஜத்தின் மிக உயர்ந்த வயதான மஹாத்மாக்களில் இவர் ப்ரஸித்தி பெற்றவர். ஸசீநந்தனதாஸ் பாபா பர்ஸானாவில் வாழ்ந்து வந்தார்.

பர்ஸானாவிற்கு வரும் தீர்த்த யாத்ரீகர்களுக்கு, இவரை தரிஸிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. வெகு தூரத்திலிருந்து பாபாவைப் பற்றி அறியாத யாத்ரீகர்களைக் கூட, அங்குள்ள பண்டாக்கள் பாபாவிடம் அழைத்து வருவார்கள். ஏனென்றால் அவர்கள் பாபாவிற்கு அளிக்கும் காணிக்கைகளையும் அன்பளிப்புகளையும், பண்டாக்களே எடுத்துச் செல்வார்கள். இவ்வாறு நடக்கிறது என்று கூட, பாபா அறியமாட்டார். அப்பொருட்களின் அவசியமும் பாபாவிற்கு இல்லை.

அவர் பெரும்பாலும், ஒரு விக்ரஹத்தைப் போல் த்யானத்திலேயே ஆழ்ந்து அமர்ந்திருப்பார். எப்படி கோவிலில் அர்ச்சாவதாரத்தின் முன்பு, நமஸ்காரம் செய்து காணிக்கைகளை செலுத்திவிட்டு மக்கள் செல்வார்களோ, அதுபோலவே இவரையும் தரிசனம் செய்து சேவித்துவிட்டு, காசு-பணமோ அல்லது பழ-புஷ்பங்களோ, இவர் முன் காணிக்கையாக வைத்து விட்டு சென்றுவிடுவார்கள்.

ஸ்ரீஸசீநந்தனதாஸ் பாபா, பர்ஸானாவில் உள்ள பானுஸரோவரின் (ஏரி) கரையிலிருந்த மஸான பூமியில், ஒரு பாழடைந்த குடிசையில்தான் வஸித்து வந்தார். பாபாவை பார்த்தாலே வங்கத்தை சேர்ந்தவர் என்று கூறி விடமுடியும். அவர் வங்காள தேசத்தில் எங்கிருந்தார் என்றோ, எப்பொழுது வ்ரஜத்திற்கு வந்தாரென்றோ, எந்த தகவலுமில்லை. ஆனால் **80** வருடங்களுக்கு மேலாக பானுஸரோவரின் இந்த குடிசையிலேயே அவர் வஸித்து வந்தார்.

அவரது ப்ரதான சிஷ்யரான ஸ்ரீஅனுராகிபாபாவிடம், அவர் ஒருமுறை கூறியிருந்தார். ‘‘சிறு வயது முதலேயே கதை மற்றும் கீர்த்தனம் என்றால், எனக்கு ஒரு போதை.

வீட்டிலிருந்து **10-20** மைல் தள்ளி கதையோ கீர்த்தனமோ நடக்கப் போகிறது என்று கேள்விப்பட்டால், உடனே நான் அங்கு சென்றுவிடுவேன். இரவு அங்கேயே தங்கி, மறுநாள் காலைதான் வீடு திரும்புவேன். வீட்டிலுள்ளோர்களின் வசவுகளையும் அடி-உதைகளையும் ஸஹித்துக்கொண்டு, பகவானிடம், 'இந்த ப்ரதிகூலமான சூழலிலிருந்து, என்னை விடுவிக்க வேண்டும்' என்று ப்ரார்த்திப்பேன். ஒரு முறை பாகவத கதை கேட்டுக் கொண்டிருந்தேன். ராஜா அம்பரீஷனின் குணங்களை வர்ணித்துக் கொண்டிருந்தார் உபந்யாஸகர்.. ''ஸ வை மன: க்ருஷ்ண பதாரவிந்தயோ: ...........'' **(ஸ்ரீமத் பாகவதம் 9-4-18)** என்ற ஸ்லோகத்தை விளக்கி கூறும்பொழுது அம்பரீஷ மஹாராஜா எவ்வாறு மனதை க்ருஷ்ணசந்திரனின் கமலசரணங்களிலும், வாக்கை பகவானின் நாம குணங்களை பாடுவதிலும், கைகளை ஆலயங்களை பெருக்கி சுத்தி செய்வதிலும், காதுகளை மங்களமயமான அவனது கதைகளை கேட்பதிலுமே செலுத்தினார் என்று எடுத்துரைத்தார். தத் க்ஷணமே, நானும் எனது அனைத்து இந்திரியங்களையும் பகவானிடமே நிலைநிறுத்துவது என்று முடிவு செய்தேன். வீட்டிலிருந்து கொண்டே, இதை செய்ய முடியாது என்று தோன்றியதால் வீட்டை விட்டு வெளியேறினேன். ஒரு சிறிய பாத்திரத்தில் துளஸி செடியை நட்டு, அப்பாத்திரத்தையே கழுத்தில் கட்டிக் கொண்டு, பாரத தேசத்தின் பல தீர்த்தங்கள் மற்றும் க்ஷேத்திரங்களை தரிசித்தபடியே, இரண்டு வருடங்களுக்கு க்ஷேத்ராடனம் செய்தேன்''.

இரண்டு வருடங்களுக்குபின், பாபா வ்ரஜத்தையடைந்தார். பூர்வாச்ரமத்திலேயே யாரிடமிருந்தோ அவர் தீக்ஷை பெற்றிருந்தார். வ்ரஜத்தில் ஸித்த ஸ்ரீஜகந்நாத்தாஸ் பாபாவின் சிஷ்யரான சித்த ஸ்ரீராமஹரிதாஸ் பாபா என்பவரிடமிருந்து, ஸந்யாஸம் பெற்றார். சில நாட்கள் வ்ரஜத்தில் பல இடங்களில் சுற்றினார். பின்பு இந்த குடிசைக்கு வந்து, இங்கேயே நிரந்தரமாக வஸித்து பஜனை செய்யலானார்.

ராதாராணியிடம் பாபாவிற்கு தீவிரமான நிஷ்டையிருந்தது. அவளுக்கு விதவிதமாக ஸேவை செய்வார் பாபா.

(தொடரும்)

# மாலே மணிவண்ணா - 131

—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்




பாண்டிய நாட்டில் வைணவம் பெற்றிருந்த உயர்ந்த நிலையை வரலாற்று முறையில் அறிந்து கொண்டு, இந்த ஏழாம் பாடலை காணலாம்.

பாண்டிய மன்னர்கள் சைவநெறியை பின்பற்றியவர்கள் ஆயினும், வைணவத்தையும் கண்ணெனப் போற்றி வளர்த்தவர்கள் எனலாம்.

சங்ககாலப் பாண்டிய மன்னர்களுள் ஒருவனான கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி அழகர் கோயில் இறைவனின் பரமபக்தனாக இருந்தவன்.

கி.பி.765 முதல் 790வரை ஆட்சி புரிந்த நெடுஞ்சடையன் பராந்தகன் என்னும் வரகுணபாண்டியன் "பரம வைஷ்ணவ நாம தனிசு" என்ற சிறப்பு பெயரை சூட்டி கொண்டான். இவன் திருமாலுக்கு கோவில் கட்டிய செய்தி, இவனது சீவரமங்கலத்து செப்பேடுகளில் குறிக்க பெற்றுள்ளது.

காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத்

திருமாலுக்கு அமர்ந்துறையக்

குன்றம் அன்னதோர் கோயிலாக்கியும்

என்ற இவனது மெய்க்கீர்த்தி அதனைப் புலப்படுத்துகிறது. .

இவன் காலத்தில் ஆனைமலையில், நரசிங்க பெருமான் குடைவரைக்கோயில் கட்டி முடிக்க பெற்றது. பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரும் பாண்டிய நாட்டினரும் இவன் காலத்தில் வாழ்ந்தவரும் ஆகிய பெரியாழ்வாரை, இவன் தன்னுடைய ஞான குருவாக ஏற்று கொண்டிருந்தான்.

சமணரோடு வாதம் செய்து சைவத்தை நிலைநிறுத்திய திருஞானசம்பந்தர் போல, பெரியாழ்வாரும் பிற சமயத்தவருடன் வாதிட்டு, வைணவத்தை நிலைநிறுத்தியவர்

ஆவார். நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் தொடக்க பாசுரங்கள் மதுரை மாநகரில் பிறந்தவையே. பெரியாழ்வார் பாண்டிய மன்னனுடைய அவையில், திருமாலின் பெருமையை நிலை நாட்டி பாண்டிய மன்னனிடமிருந்து பொற்கிழி பெற்றார் என்ற வரலாறு அனைவரும் அறிந்தது.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனும், அவன் பேரன் ஸ்ரீவீரநாராயணனும் வைணவத்தை தழுவியவர்கள். இவர்களுக்கு இடைப்பட்ட இரண்டாம் வரகுணன் (மணிவாசகர் காலத்தவன்) சைவனாக இருந்தான். பாண்டிய நாட்டில் சைவ-வைணவ சச்சரவுகள் முன்னாளில் இல்லை. இந்நாளிலும் இல்லை எனலாம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில், மதுரையை ஆண்ட மாவீரன் சடையவர்மன் சுந்தரபாண்டியன், சைவ-வைணவ இருசமயத்தார்க்கும் முதன்மையான தலங்களாக விளங்கும் தில்லைக்கும் திருவரங்கத்திற்கும் பொன்வேய்ந்தவன் ஆவான். இது சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியால் புலனாகும்.

நாயக்க மன்னர்கள் ஆட்சியிலும், மதுரை மீனாட்சி கோவிலுக்கு முரண்படாத வகையில், வைணவம் சிறப்பு பெற்றது. பிற்கால பாண்டியர், நாயக்கர் ஆட்சியில் ஏற்பட்ட வைணவக்கோயில்கள் இம்மாவட்டத்தில் பல ஆகும்.

சைவ, வைணவ கோயில்களை இணைக்கும் விழாவாக சித்திரை பெருவிழா இன்றும் சிறப்புடன் கொண்டாட பெறுகிறது.

அன்றும் இன்றும், வைணவம் என்னும் குழந்தையை தாலாட்டி வளர்த்த பெருமைக்குரியது, மதுரையும் பாண்டிய நாடும் எனல் மிகையாகாது.

மதுரை மாநகரின் தலையாய வைணவக்கோயில் இதுவே. மதுரை திருநகரின் புறம்பே உள்ள அழகர்கோயில் எனப்பெறும் திருமாலிருஞ்சோலைமலைக்கு அடுத்தபடி மதுரை நகரின் உள்ளே உள்ள சிறப்பு மிகுந்த திவ்யதேசங்களுள் ஒன்று இக்கோயில் ஆகும். (தொடரும்)

# ஸ்ரீ மஹாபெரியவாளின் கருணை

-ப்ரும்மஸ்ரீ பம்மல் ஏகாம்பரம்

---

ஸ்ரீமஹாபெரியவாள் 1965ஆம் ஆண்டு, சென்னை எண்ணூரை அடுத்த காட்டுப்பள்ளியில், சாதுர்மாஸ்ய விரதம் முடிந்து நவராத்திரிக்கும் அங்கேயே தங்கி இருந்தார். சுமங்கலிகள் எல்லாம் சேர்ந்து அகில இந்திய ஸுவாசினிகள் பிக்ஷாவந்தனம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, நவராத்திரி சமயத்தில், வருடம் ஒருமுறை பிக்ஷாவந்தனம் நடத்தி வந்தார்கள். இந்த முறை மஹாபெரியவாள் காட்டுப்பள்ளியில் தங்கி இருந்ததால், இந்தியாவின் பல பாகங்களில் இருந்து சுமங்கலிகள் எல்லாம் காட்டுப்பள்ளிக்கு வந்திருந்தார்கள்.

அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் என்ற சங்கீத வித்வானை தெரியாதவர்களே இருக்க முடியாது. அவரது முக்கியமான சீடர் பாலக்காடு ஸ்ரீ கே.வி.நாராயணஸ்வாமி அய்யர் ஆவார்கள். அவர்களுடைய மனைவி பத்மாவதி அவர்களும் அந்த பிக்ஷாவந்தனத்திற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது, அவருடைய கணவர் நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள், சங்கீத நிகழ்ச்சிகளுக்காக அமெரிக்கா சென்றிருந்தார்கள். ஸ்ரீமஹாபெரியவாள், ஸ்ரீதிரிபுர சுந்தரி ஸமேத சந்திரமௌலீஸ்வரர் பூஜை முடித்து, தீர்த்த பிரசாதம் கொடுத்து கொண்டிருந்தார்கள்.

எல்லோருக்கும் தீர்த்த பிரசாதம் மட்டும் கொடுத்து கொண்டு வந்த ஸ்ரீமஹாபெரியவாள், ஸௌ.பத்மாவதி தீர்த்தம் வாங்க கை நீட்டியதும், ஏதோ சற்று யோசிப்பது போல் யோசித்து, அவர்களை புடவை தலைப்பை நீட்ட சொல்லி, அதில் மூன்று முறை குங்குமத்தை அள்ளி போட்டார்கள். பிறகு தீர்த்தம் கொடுத்து அனுப்பினார்கள். ஸ்ரீபெரியவாள் இப்படி செய்தது, மற்றவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அந்த காலத்தில் டெலிபோன் என்பது அபூர்வமான விஷயம். யாரோ சிலருடைய வீட்டில்தான் இருக்கும்.

தகவல் தொடர்பு சாதனங்கள் இன்றைய அளவிற்கு முன்னேறாத ஒரு காலம். வீட்டிற்கு வந்து சேர்ந்த பத்மாவிடம் சிலர் ஓடி வந்து, "மதியம் போன் வந்தது. அமெரிக்காவில் உள்ள உங்கள் கணவருக்கு இன்று காலை **severe Heart attack** வந்து மிகவும் **critical** ஆகி விட்டதாம். இப்பொழுது மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை கொடுத்து வருகின்றார்கள். அவர் இப்பொழுது அபாய நிலையை தாண்டி விட்டதாக மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். ''கவலைப்பட வேண்டாம்'' என்று தங்களிடம் சொல்ல சொன்னார்கள்" என்றனர். இதை கேட்டவுடன் எப்படி இருந்திருக்கும் பத்மாவதி அவர்களுக்கு! அப்போதுதான் ஸ்ரீமஹாபெரியவாள் தனக்கு தீர்த்தம் கொடுக்கும்பொழுது மட்டும், சற்று யோசித்தது போல் இருந்து விட்டு, தனக்கு மட்டும், மூன்று முறை குங்குமத்தை மடியில் போட்டதன் காரணம் புரிந்தது.

ஸ்ரீமஹாபெரியவாள் காட்டுப்பள்ளி என்ற கிராமத்தில் உட்கார்ந்து கொண்டு, உலகத்தில் ஒரு மூலையில் உள்ள அமெரிக்காவில் நடப்பதை, தன்னுடைய ஞானதிருஷ்டியால் தெரிந்து கொண்டதோடு மட்டும் அல்லாமல், அந்த கஷ்டத்தை அங்கிருந்தபடியே நிவர்த்தியும் செய்து விட்டார். ஆனால் அதை சொல்லக் கூட இல்லை. என்னே அவருடைய கருணை!

சுமங்கலிகளுடைய பிக்ஷாவந்தனம் செய்ய வந்துவிட்டு, சௌ.பத்மாவதி சுமங்கலியாகவே செல்ல வேண்டும் என்று அவருடைய துயரத்தை துடைத்தார். அவர் அமெரிக்காவில் இருந்து வந்த பிறகு, தம்பதிகளாக வந்து தரிசனம் செய்து கொண்டார்கள். அதோடு மட்டும் அல்லாமல், ஒவ்வொரு மஹாசிவராத்திரி அன்றும், ஸ்ரீபெரியவாள் இந்தியாவில் எங்கிருந்தாலும், அங்கு வந்து, தம்பதிகளாக தரிசனம் செய்து பாடி விட்டும் செல்வார்கள்.

"ஓம் நமோ பகவதே ருத்ராய விஷ்ணவே குரவே ம்ருத்யுர் மே பாஹி"

(நிகழ்வுகள் தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
**D.D. in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் (**D.D /M.O/Cash**) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரு வருட சந்தா மட்டுமே பெற்று கொள்ளப்படுகிறது.
கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம்

| | |
|---|---|
| ஏகாதசி | செப்டம்பர் 5, 20 அக்டோபர் 4, 19 |
| ஆகஸ்டு 29 | செங்கல்பட்டு அருகே ஆத்தூர் |
| செப் 8 | சைதன்ய குடீரம் ப்ரதிஷ்டாதினம் |
| செப் 24 -அக்3 | நவராத்திரி - சுந்தர ஆஞ்சநேயர் கோவில் |
| அக் 3 | ப்ரேமிகபவனம் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் ப்ரதிஷ்டாதினம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.